**செய்தி வெளியீடு எண்: 326** **நாள்:20.06.2013**

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (20.6.2013) தலைமைச் செயலகத்தில், அரசு போக்குவரத்துக் கழகங்கள் சார்பில் 189 புதிய பேருந்துகள் மற்றும் 55 புனரமைக்கப்பட்ட பேருந்துகள், என மொத்தம் 244 பேருந்துகளை துவக்கி வைத்தார்கள்.

தமிழகத்தில் பொதுமக்களுக்கு சிறப்பான போக்குவரத்து சேவைகளை அளிப்பதில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் முக்கியப் பங்காற்றி வருகின்றன. பெரிய நகரங்கள் மட்டுமல்லாது கிராமங்கள், சிற்றூர் மற்றும் தொலைதூர குடியிருப்புகள் உட்பட மக்கள் குடியிருக்கும் அனைத்து பகுதிகளுக்கும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் தங்கு தடையின்றி இயக்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் நாளொன்றுக்கு 2 கோடியே 10 லட்சம் பயணிகள் பயணிக்கின்ற அளவில் 20,507 தடப் பேருந்துகளை இயக்கி வருகின்றன. பொதுமக்களின் தேவைகளுக்கேற்ப, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு தொடர்ந்து புதிய பேருந்துகள் மற்றும் புதிய வழித்தடங்களை அறிமுகம் செய்து வருகிறது.

அந்த வகையில், அரசு போக்குவரத்துக் கழகங்கள் சார்பில், 189 புதிய பேருந்துகள் மற்றும் 55 புனரமைக்கப்பட்ட பேருந்துகள், என மொத்தம் 244 பேருந்துகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று தலைமைச் செயலகத்தில் கொடியசைத்து துவக்கி வைத்தார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இன்று துவக்கி வைக்கப்பட்ட பேருந்துகளில், ஸ்ரீரங்கம் – சென்னை மற்றும் சென்னை – ஸ்ரீரங்கம் வழித்தடத்தில் விமானம் மற்றும் இரயில் வண்டிகளில் உள்ளது போன்ற உணவு பரிமாறுதல் மற்றும் கழிப்பிட வசதியுடன் கூடிய இரண்டு புனரமைக்கப்பட்ட பேருந்துகளும் அடங்கும் என்பது குறிப்பிடத்தக்கது. தமிழ்நாடு அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் உணவு மற்றும் கழிப்பிட வசதியுடன் கூடிய பேருந்துகள் இயக்கப்படுவது தமிழகத்தில் இதுவே முதல் முறையாகும்.

சென்னை பெருநகரத்தில் தற்போது 134 பேருந்துகள் மகளிர் மற்றும் சிறுவர்களுக்காக ஏற்கெனவே இயக்கப்பட்டு வருகின்றன. சென்னையில் அதிகரித்து வரும் போக்குவரத்துத் தேவைகளுக்கேற்ப மகளிர் மற்றும் சிறுவர்களுக்கு கூடுதலாக 66 புதிய வழித்தடப் பேருந்துகள்;

போக்குவரத்துக் கழகங்களின், மாநகர மற்றும் நகர பேருந்துகளில் வழக்கமாக பயணம் செய்யும் பயணிகளுக்கு தற்போது மூன்றில் ஒரு பங்கு சலுகைக் கட்டணத்துடன் கூடிய மாதாந்திர பயணச் சீட்டு வழங்கும் முறை நடைமுறையில் உள்ளது.

அந்த முறையை விரிவுபடுத்தி, புறநகர் பேருந்துகளில் பயணம் செய்யும் பயணிகளுக்கும் சலுகைக் கட்டணத்துடன் கூடிய மாதாந்திர பயணச்சீட்டு வழங்கும் திட்டம்;

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் கோயம்புத்தூர் கோட்டத்தில் ஊட்டி மண்டலம், கும்பகோணம் கோட்டத்தில் கரூர் மற்றும் நாகப்பட்டினம் மண்டலங்கள், திருநெல்வேலி கோட்டத்தில் தூத்துக்குடி மண்டலம் ஆகிய நான்கு புதிய மண்டலங்கள்;

பண்டிகைக் காலங்கள் நீங்கலாக மற்ற நாட்களில் தொலைதூர வழித்தடங்களில் முன்பதிவு செய்யும் பயணிகளை ஊக்குவிக்கும் வகையில் குறைந்தபட்சம் 10 அல்லது

அதற்கு மேற்பட்ட பயணச் சீட்டுகளை முன்பதிவு செய்யும் குழும பயணிகளுக்கு பயணத் தொகையில் 10 சதவீதம் தள்ளுபடி வழங்கும் திட்டம்;

அரசு போக்குவரத்துக் கழக பணியாளர்கள் தாமாக முன்வந்து ரத்ததானம் செய்வதை ஊக்குவிக்கும் வகையில் அவர்கள் ரத்ததானம் செய்கின்ற தினம் ஊதியத்துடன் கூடிய பணி நாளாகவும் மற்றும் அதற்கு அடுத்த நாள் ஊதியத்துடன் கூடிய ஓய்வு நாளாகவும் அனுமதிக்கும் திட்டம்;

பொதுமக்கள், போக்குவரத்துக் கழக பணியாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் சிறந்த முறையில் மருத்துவ வசதி பெற ஏதுவாக சாலை போக்குவரத்து நிறுவனத்தின் பெருந்துறை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்காக 1 கோடியே 28 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள CT Scan சாதனம்;

ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று தலைமைச் செயலகத்தில் துவக்கி வைத்தார்கள்.

மேலும், போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றி ஓய்வு பெற்ற 822 பணியாளர்களுக்கு 17 கோடியே 34 லட்சம் ரூபாய்க்கான ஓய்வூதிய ஒப்படைப்புத் தொகையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று தலைமைச் செயலகத்தில் வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர், தலைமைச் செயலாளர், போக்குவரத்துத் துறை முதன்மைச் செயலாளர், மாநகர போக்குவரத்துக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

*******

வெளியீடு : இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9
நாள் : 20.6.2013